# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பாரிஸில் உள்ள மஸ்ஜித் முபாரக் பள்ளிவாசலில்
## 10.10.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் அஃராஃபின் 28 -வது வசனத்தை ஓதினார்கள்:**

பொருள் : ஆதமின் மக்களே! உங்கள் மானத்தை மறைக்கக் கூடியதும் அணிகலனாக இருக்கக் கூடியதுமான ஆடையினை உங்களுக்காக நாம் இறக்கியுள்ளோம். ஆனால், இறையச்சத்தின் ஆடை - அதுதான் சிறந்தது. இது அவர்கள் அறிவுரை பெறுவதற்கான அல்லாஹ்வின் கட்டளைகளைச் சேர்ந்ததாகும். (7:27)

பிரான்ஸிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு முதல் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நற்பேற்றை அல்லாஹ் வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ். இன்னும் பல பள்ளிவாசல்கள் உருவாகுவதற்கு இந்த பள்ளிவாசல் ஒரு வலுவான அடித்தளமாக அமைவதற்கு அல்லாஹ் உதவி செய்வானாக. நாட்டின் சட்டமும் எவ்வகையிலும் இதற்கு தடையாக்காமல் இருக்க வேண்டும். ஜமாஅத் சகோதரர்கள் மத்தியிலும் தியாக உணர்வு மேலும் அதிகமாகட்டும். பள்ளிவாசலைக் கட்டுவதற்கு ஆர்வம் மட்டுமின்றி, பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நோக்கங்களை நிறைவு செய்கின்ற அந்த ஆன்மாவும் அவர்களிடம் உருவாகட்டுமாக. இந்த பள்ளிவாசலைக் கட்டியது நிச்சயமாக ஜமாஅத் சகோதரர்களிடத்தில் எத்தகையை படிப்பினையை தந்திருக்குமென்றால் வலுவான எண்ணம் ஒருவரிடத்தில் இருந்தால் அத்துடன் உண்மையான ஆர்வமும் துடிப்பும் அவரிடம் இருந்தால் அதற்குரிய நேரத்தில் அல்லாஹ் தனது அருளால் எல்லா தடைகளையும் அகற்றி விடுவான். எந்த இடத்தில் இந்த அழகிய பள்ளிவாசல் இப்போது கட்டப்பட்டுள்ளதோ அதன் மினாராவின் உயரம் தொடர்பாக இந்த பகுதியில் வாழும் மக்கள் சில ஆட்சேபனைகளை செய்ததால் இங்குள்ள Council சில தடைகளை விதித்திருந்தாலும் குறைந்தபட்சம் இந்த இடத்தில் மஸ்ஜித் என்ற பெயரை வெளிப்படுத்தியவாறு பள்ளிவாசலை முறைப்படி நிறுவுவதற்கான அனுமதி நமக்கு கிடைத்திருக்கின்றது. இப்போதுள்ள தேவைக்கேற்ப ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழுகைகளையும் ஜுமுஆ தொழுகைகளையும் தொழுவதற்கான இடம் அவர்களுக்கு கிடைத்து விட்டது. இன்று வெளியூர்களிலிருந்தும் சில விருந்தினர்கள் வந்துள்ளார்கள். அதனால் இந்த இடம் சிறியதாக தெரிகிறது. பிரான்ஸ் ஜமாஅத்தைப் பொறுத்த அளவில் இந்த இடம் பள்ளிவாசலுக்கு போதுமானதாகும். இன்ஷா அல்லாஹ் மினாராவின் உயரம் தொடர்பான பிரச்சனைக்கும் படிப்படியாக தீர்வு கிடைத்து விடும். இந்த இடத்தில் முதலில் தற்காலிகமாக ஒரு HALL இருந்தது. அதில் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன. இப்பகுதியிலுள்ள மக்களது ஆட்சேபனைகளும் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தது. எதுவரையென்றால், இப்பகுதியின் மேயர் அவர்கள்கூட ஒருநாள் மிகவும் கோபத்துடன் நம்மிடம் வந்தார். மேலும் இந்த இடத்தில் தொழுவதை நிறுத்த வேண்டும் என்றும், இந்த HALL உடைக்கப்படும் என்றும் அவர் நம்மை மிரட்டினார். ஆனால், அல்லாஹ் நம்மீது அருள் செய்தவாறு இப்படிப்பட்ட மக்களது உள்ளங்களை தனது அருளால் மாற்றி விட்ட காரணத்தால் நம்மை எதிர்த்த இவர்களே இறுதியில் முறைப்படி பள்ளிவாசலை இதே இடத்தில் நிறுவுவதற்கான அனுமதியை நமக்கு வழங்கியுள்ளார்கள். எனக்கு நினைவில் இருக்கின்றது. இதே மேயர் அவர்களுக்கு ஜமாஅத்தைப் பற்றிய நல்லெண்ணம் இல்லாமலிருந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு ஒரு ஆண்டு மாநாட்டின் போது அவர் இங்கு வந்த சமயத்தில் நான் இங்கு இருந்தேன். அப்போது மிகவும் மரியாதையுடன் தனது Shoe -க்களை கழற்றி விட்டு அவர் Stage -ல் ஏறினார். மிகவும் மரியாதையுடன் என்னை சந்தித்தார். அல்லாஹ்தான் இவரது உள்ளத்தை மென்மையாக்கினான். நம்மை தொழுவதிலிருந்தும் தடை செய்து தொழுகைக்காக நாம் கட்டியிருந்த அந்த தற்காலிக Hall ஐ வீழ்த்தும் எண்ணத்திலிருந்த அதே நபர் முறைப்படி அதே இடத்தில் நாம் பள்ளிவாசலைக் கட்டுவதற்கு அனுமதியளிப்பதற்கு தயாராகி விட்டதுடன் மட்டுமல்லாமல் இவ்வழியில் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு அவரே நமக்கு உதவி செய்பவராகவும் மாறி விட்டார். இன்றுவரை அவர் நமக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றார். அல்லாஹ் இவருக்கு இதற்கான நற்கூலியை

வழங்குவானாக. இவரது நெஞ்சத்தை மேலும் திறப்பானாக. அதன் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அவர் புரிந்து கொள்ளும்படி செய்வானாக.

எனவே, இவ்வாறு அல்லாஹ் ஜமாஅத்தின் மீது தனது அருளைப் பொழிவதும் தனது எண்ணற்ற அருட்கொடைகளை வழங்குவதும், நாம் கேட்பதை விட அதிகமாக வழங்குவதும், **யன்ஸுருக ரிஜாலுன் நூஹி இலைஹி மினஸ்ஸமாயி** – விண்ணிலிருந்து நாம் வஹீ அறிவித்த மனிதர்கள் உமக்கு உதவி செய்வார்கள் என்ற சொற்கள் மூலம் நமக்கு ஆறுதலைத் தருவதும், நம்மவர்களிலிருந்து மட்டுமல்லாமல் மற்றவர்களது உள்ளத்திலும், நான் அவர்களுக்கு உதவி செய்பவர்களாக ஆகி விட வேண்டும் என்ற எண்ணத்தைப் போடுவதும் அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். இந்த விஷயங்கள் நம்மை இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக்க வேண்டும். நன்றி செலுத்துவதை நாம் எப்படி செய்ய முடியும்? அதற்கான வழிமுறை என்னவென்றால், இறைவனை வணங்குவதன் பக்கம் நாம் முன்பை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். பள்ளிவாசலின் அழகு, பொலிவு தொடர்பான எண்ணம் முன்பை விட அதிகமாக நமது உள்ளத்தில் இருக்க வேண்டும். தக்வாவில் முன்னேறுபவர்களாக நாம் இருக்க வேண்டும். ஏனென்றால் பள்ளிவாசலைக் கட்டுவதன் மிகப்பெரும் நோக்கம் தக்வாவை நிலைபெறச் செய்வதேயாகும். பள்ளிவாசல் நம்மை ஏக இறைவன் முன்னால் தலைகுனிய வைப்பதுடன் இறைவனின் படைப்பினங் களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இந்த மிகப்பெரும் நோக்கத்தை ஒவ்வொரு அஹ்மதியும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். இறைவனது வீட்டிற்குள் நீங்கள் நுழையும்போது எல்லாவிதமான உலக சிந்தனைகளையும் வெளியே வைத்து விட்டு செல்ல முயற்சி செய்யுங்கள். ஏனென்றால், இது இறைவனின் வீடாகும். எல்லா உலகங்களையும் படைத்த அவற்றின் எஜமானனான இறைவன் அகிலங்களின் இறைவனாவான். நமக்கும் நமது நேசத்திற்குரியவர்களுக்கும் வாழ்வை வழங்கக்கூடியவன் அந்த இறைவனேயாவான். நமது வாழ்க்கைக்கு தேவையானவற்றை நிறைவு செய்பவன் அந்த இறைவனேயாவான். இந்த எண்ணம் நமக்கு இருந்தால் அவன் முன்னால் நாம் நிற்கும் போது நமக்கு வேறு எந்த எண்ணமும் வராது. இந்த எண்ணம் நம்மிடம் இருக்கும் வரை ஒவ்வொரு மறைவான ஷிர்க்கிலிருந்தும் நாம் தப்பித்து விடுவோம். உலக கவலைகளும் பிரச்சனைகளும் இன்றைய நாட்களில் மனிதனுடைய எண்ணத்தை தன் பக்கம் ஈர்த்திருக்கின்றது. தொழுது கொண்டிருக்கும்போதே மனிதனின் எண்ணம் இதன் பக்கம் சென்று விடுகிறது. மனிதன் நாவால் சொற்களை கூறிக்கொண்டிருந்தாலும் அவன் என்ன செய்து கொண்டிருக்கின்றான் என்பதை அவனாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. இறுதியில் ஸலாம் கூறி அவர் தொழுகையை விட்டு வெளியேறி விடுகின்றார். இந்த காலத்தின் இமாமை ஏற்றுக்கொண்டு நாம் நம்மிடத்தில் தூய மாறுதலை ஏற்படுத்த முயற்சி செய்வோம் என்று நாம் உடன்படிக்கை எடுத்துக் கொள்ளும்போது முதலாவதாக நாம் பேண வேண்டிய விஷயம் ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு அடுத்த ஜுமுஆவிற்கு வருவது என்றில்லாமல் தவிர்க்க முடியாத காரணம் இருந்தாலேயொழிய தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். களங்கமற்ற தூய உள்ளத்துடன் அல்லாஹ்வின் முன்பு நிற்க முயற்சி செய்யுங்கள். பள்ளிவாசலுக்கு வந்த பிறகு முழுக்க முழுக்க அல்லாஹ்வின் பக்கமே கவனம் இருக்க வேண்டும். உங்களது இறைவணக்கங்களுக்குரிய உரிமைகளையும், பள்ளிவாசலுக்குரிய உரிமைகளையும் செலுத்த முயற்சி செய்யுங்கள். அந்த உரிமைகளை எப்படி நீங்கள் செலுத்த முடியும்?

**இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவனைப் பற்றி அறிந்து அவனது நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் இறைவன் மனிதனை படைத்துள்ளான். வமா கலக்தல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லி யஃபுதூன் – நாம் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம் என இறைவன் கூறியுள்ளான். யார் இந்த அசல் நோக்கத்தை கண்முன் நிறுத்தி செயல்படவில்லையோ, மேலும் இரவும் பகலும் உலகைப் பெற்றுக் கொள்வதன் கவலையிலேயே மூழ்கியிருப்பாரோ அதாவது, இந்த நிலத்தை நான் வாங்க வேண்டும்; இந்த வீட்டை நான் கட்ட வேண்டும்; இந்த சொத்து எனது ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருப்பாரோ அப்படிப்பட்ட நபருக்கு அல்லாஹ் சில நாட்கள் அவகாசம் வழங்கி விட்டு அவரை தன்பால் அழைத்துக் கொள்வதைத் தவிர வேறு எவ்விதத்தில் அவருடன் பரிமாற முடியும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுடைய உள்ளத்தில் இறை நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு வேதனை இருக்க வேண்டும். அதன் காரணமாக அம்மனிதன் அந்த இறைவனின் பார்வையில் ஒரு கண்ணியத்திற்குரிய தகுதியைப் பெற்ற பொருளாகி விடுகின்றான்.

அந்த இறைவனுடன் கொஞ்சமாவது தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில்தான் மனிதனின் நற்பாக்கியம் அடங்கியிருக்கின்றது. எல்லா வணக்கங்களின் தலைமையகமும் உள்ளமாக இருக்கின்றது. மனிதன் இறைவணக்கத்தில் ஈடுபட்டாலும் அவனது உள்ளம் இறைவன் பக்கம் திரும்பாவிட்டால் அந்த இறை வணக்கத்தால் என்ன பலன் கிடைக்க முடியும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆயிரக்கணக்கான பள்ளிவாசல்கள் இருக்கின்றன. ஆனால், வெறுமனே சடங்கு என்ற நிலையில் இறைவணக்கம் செய்யப்படுவதைத் தவிர அங்கு வேறு என்ன இருக்கின்றது?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த எச்சரிக்கை உள்ளத்தை உலுக்கக்கூடியதாகும். சில பள்ளிவாசல்கள் அதன் அழகில் எந்த அளவு பொலிவுடன் தோற்றமளிக்கின்றதென்றால் நமது பள்ளிவாசல்கள் அவற்றுடன் போட்டி போட முடியாது. ஆனால், அவை இறைவனுக்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கும் கட்டுப்படுவதில் இருந்தும் கீழ்படிந்து நடப்பதிலிருந்தும் வெளியேறிய நிலையில் கட்டுப்பட்டிருப்பதால் வெளிப்படையான அழகு அந்த பள்ளிவாசல்களில் இருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள அந்த உண்மையான அழகு அவர்களிடம் உருவாக முடியாது. ஏனென்றால், இந்த பள்ளிவாசல்களை கட்டியவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படியாமல் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததுடன் அவரை எதிர்ப்பதிலும் முன்னேறிச் சென்றுள்ளார்கள். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் எந்த மஹ்தி, மஸீஹின் வருகை பற்றிய செய்தியை தெரிவித்திருந்தார்களோ அந்த மஹ்தி மஸீஹை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது இங்கு நாம் நமது பள்ளிவாசலைக் கட்டிய பிறகு அந்த பள்ளிவாசல் பெரிதாக இல்லாவிட்டாலும் அது தற்சமயம் இங்குள்ள தேவைக்கு போதுமானதாகும். இப்போது இந்த பள்ளிவாசல் கட்டப்படுவதுடன் அஹ்மதிகளின் பொறுப்புகளும் அதிகரிக்கின்றது. முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் ஆகிய எல்லோரது கவனமும் இனி உங்கள் பக்கம் திரும்பிவிடும்.

நேற்று அமீர் சாஹிப் அவர்கள் இங்கு அச்சிடப்பட்டு வெளிவரும் ஒரு பத்திரிகையை எனக்கு காட்டினார்கள். அதற்கு அதிகமான CIRCULATION இருக்கின்றது. அதில் பள்ளிவாசல கட்டப்பட்ட செய்தியுடன் நம்மைப் பற்றிய அறிமுகம் இடம்பெற்றிருந்தது. இதன் மூலமாக எங்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் மற்றவர்களுக்கு சென்று சேர்கிறதோ, அங்கு பொறாமைக்காரர்களின் பொறாமையும் அதிகரிக்கின்றது. அறிமுகம் கிடைத்திருப்பதால் தப்லீகிற்கான சந்தர்ப்பம் உருவாகுவதற்காகவும் அதன் சிறந்த விளைவுகள் வெளிப்படுவதற்காகவும் பொறாமை காரணமாக ஏற்படுகின்ற பகைமையிலிருந்தும் அதனால் ஏற்படுகின்ற இழப்புகளிலிருந்தும் தப்பிப்பதற்காகவும் உள்ள சிறந்த வழி துஆவாகும். மேலும் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவதாகும். களங்கமற்ற தூய உள்ளத்துடன் தாழ்மையுடனும், பணிவுடனும் இறைவன் முன்னால மன்றாடியவாறு அவனது உதவியை கேட்பதாகும். உள்ளங்களை திறப்பவனும் இறைவனேயாவான். பொறாமைக்காரர்களின் பொறாமையிலிருந்தும் நம்மை காப்பாற்றுபவனும் இறைவனேயாவான்.

எனவே, இந்த பள்ளிவாசலைக் கட்டியதுடன் நீங்கள் மூன்று விதமான சவால்களை எதிர்கொள்ள வேண்டியது வரும். முதலாவதாக, இறைவணக்கங்களை முன்பை விட அதிகமாக செய்யவும் அந்த இறைவணக்கங்களை அழகுபடுத்தவும் முயற்சிகள் செய்ய வேண்டும். இதற்காக களங்கமற்ற தூய உள்ளத்துடன் இறைவனது வீட்டிற்கு வந்து ஐவேளை தொழுகைகளையும் தொழ முயற்சி செய்ய வேண்டும். தொழுகைகளின் பக்கம் நீங்கள் அழைக்கப்படும்போது எவ்வித சாக்குப்போக்கும் கூறாமல் லப்பைக் என்று கூறி அந்த அழைப்பை ஏற்று செயல்பட வேண்டும். உண்மையான வெற்றி தொழுகையின் மூலமே கிடைக்கின்றது. மேற்கத்திய நாடுகளில் பொதுவாகவும் பிரான்ஸ் மற்றும் அதன் அருகாமையில் இருக்கும்

நாடுகள் தொடர்பாக குறிப்பாகவும் உலக அலங்காரங்கள், கவர்ச்சிகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ள நகரம் என்று கூறப்படுகிறது. எனவே, நீங்கள் உங்களை இறைவனுக்கு முன்னால் குனிபவர்களாக ஆக்குவதன் மூலமாக நிச்சயமாக இறைவனின் அன்பை பெற்றுக் கொள்வீர்கள்.

எனவே, இந்த பள்ளிவாசலைக் கட்டியதுடன் உங்களது இறைவணக்கத்தின் தரத்தையும் புதிதாக நிலைநாட்ட வேண்டும்.

நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய இரண்டாவது சவால் தப்லீக் தொடர்பானதாகும். இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில இது பற்றி நான் கூறியுள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இஸ்லாத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை ஒரே தலைமையகத்தின் கீழ் கொண்டுவர நீங்கள் எங்கு முயற்சி செய்தாலும் அங்கு முதலில் ஒரு பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்றே கூறியுள்ளார்கள். இதன் மூலமாக மக்களிடம் நம்மைப் பற்றி நாம் அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். தப்லீகிற்கான சந்தர்ப்பமும் இதன் மூலமாக கிடைக்கும். நான் ஏற்கனவே கூறியதுபோன்று இந்த பள்ளிவாசலை நான் திறந்து வைத்து துவக்க நிகழ்ச்சிகள் நடப்பதற்கு முன்னரே ஒரு பத்திரிகையில் பள்ளிவாசல் தொடர்பான செய்தியும், ஜமாஅத்தைப் பற்றிய அறிமுக செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது. இது துவக்கம்தான். இன்ஷா அல்லாஹ் மேலும் தப்லீகிற்கான பல வழிகள் திறக்கும். அந்த வழிகள் திறக்கும்போது மக்களது பார்வை உங்கள் மீது இருக்கும். எனவே, இந்த சவாலை எதிர்கொள்ளவும் நீங்கள் தயாராகி விடுங்கள். பிரான்ஸில் தப்லீகிற்கான சிறந்த விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், இங்கு நமது தப்லீக் சில குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அல்லது துறையைச் சார்ந்தவர்கள் மத்தியில் மட்டுமே இருந்து வருகிறது. இவர்களில் அரபு நாட்டைச் சார்ந்த முஸ்லிம்கள் அதிகமாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பான தூதுச் செய்தியை அரபு நாட்டைச் சார்ந்தவர்களுக்கு எட்ட வைப்பது மிக நல்ல விஷயம்தான். இதற்கான உரிமை முதலில் அவர்களுக்குத்தான் இருக்கின்றது. ஏனென்றால், இவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை தொடர்பான தூதுச் செய்தியை நமக்கு எட்ட வைத்து நற்பாக்கியம் பெற்றுள்ள அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக நாம் ஆகுவதற்கு காரணமாக இருந்து நம்மீது அருள் செய்துள்ளார்கள். அதன் மூலம் நமது உலகமும் சரியாகி விட்டது. மறுமையில் நிரந்தர வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கான வழியும் நமக்கு கிடைத்து விட்டது.

எனவே, முழு அரபு நாட்டைச் சார்ந்தவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடிமையாக திகழ்ந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பான தூதுச் செய்தியை எட்ட வைப்பது நமது முதல் கடமை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அத்துடன் நாம் நினைவில் வைக்க வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகத்திற்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்த காலத்தில் உலகளாவிய அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய தூதுச் செய்தியை எட்ட வைக்கும் பணி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பணியாகும். இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பது நமது பணியாக இருக்கின்றது. எவருக்கு இறைவன் நேர்வழி காட்ட விரும்புவானோ, மேலும் எவரது இயல்பு நல்லதாக இருக்குமோ அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக மாறுவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்து விடுவான். தூதுச் செய்தியை எட்ட வைப்பதும், துஆ செய்வதும் நம்முடைய முக்கியமான பணியாகும். ஏனென்றால், துஆக்களின் ஆயுதம்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய ஆயுதமாக திகழ்ந்தது. இந்த ஆயுதம்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒருபோதும் உங்களது அறிவு மற்றும் தப்லீகின் மீது மட்டும் நம்பிக்கை வைத்து அதையே சார்ந்து நிற்க வேண்டாம். தப்லீகிற்கான நல்விளைவையும் அல்லாஹ்தான் ஏற்படுத்துவான். அதன் கனிகள் அல்லாஹ்வின் அருளால்தான் கிடைக்கும். இறைவனது அருளை ஈர்ப்பதற்கு துஆக்கள் மிகவும் அவசியமானதாகும். எனவே, துஆக்கள் செய்வதற்கு ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

மூன்றாவதாக நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால் உலகின் பார்வை உங்கள் மீது விழும்போது உங்களது செயல்களின் பக்கமும் உங்களது பார்வை இருக்க வேண்டும். ஏனென்றால், எவர்களுக்கு நீங்கள்

தப்லீக் செய்வீர்களோ அவர்கள் உங்களது செயல்களையும் பார்க்கின்றார்கள். நிச்சயமாக அவர்கள் நாம் எழுவதையும், உட்காருவதையும், நமது ஒவ்வொரு அசைவையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நம்மில் ஒருவர் மற்றவருடன் வைத்துள்ள தொடர்பையும் அவர்கள் பார்க்கின்றார்கள். நமது சொல்லையும் செயலையும் அவர்கள் பார்க்கின்றார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்திலுள்ள மக்கள் சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். எவர் நமது ஜமாஅத்தில் இருந்து கொண்டு தீய முன்மாதிரியைக் காட்டுவாரோ, கொள்கை ரீதியாகவும் செயல் அளவிலும் தனது பலவீனத்தை வெளிப்படுத்துவாரோ அவர் அநீதியிழைப்பவராவார். ஏனென்றால், அவர் ஜமாஅத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றார். நம்மையும் ஆட்சேபனைக்கு ஆளாக்குகின்றார்.

தீய முன்மாதிரியின் விளைவாக மற்றவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. நல்ல முன்மாதிரியின் விளைவாக மக்களுக்கு நம்மீது விருப்பம் ஏற்படுகின்றது. சில மக்களது கடிதம் நம்மிடம் வருகின்றன. அதில் அவர்கள் நாங்கள் உங்கள் ஜமாஅத்தில் இப்போது இணையவில்லை என்றாலும் உங்களது ஜமாஅத்திலுள்ள சில மக்களது நிலைமைகளைப் பார்த்த பிறகு இந்த ஜமாஅத்தின் போதனைகளில் நிச்சயமாக நன்மைகள் உள்ளன என்பதை எங்களால் கணிக்க முடிகிறது. **இன்னல்லாஹா மஅல்லதீனத்தக்கவ் வல்லதீனஹும் முஹ்ஸினூன்** – நிச்சயமாக அல்லாஹ் இறையச்சத்தை மேற்கொள்பவர்களுடனும் நன்மைகளை செய்பவர்களுடனும் இருக்கின்றான் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

மனிதனின் செயல்கள் தொடர்பான நாள்பதிவேட்டை அல்லாஹ் தயார் செய்கின்றான். அவ்வாறே மனிதனும் தனது செயல்கள் தொடர்பான ஒரு நாள்பதிவேட்டை (Day Book) தயார் செய்ய வேண்டும். மேலும் நன்மைகளில் எந்த அளவு அவர் முன்னேறிச் சென்றுள்ளார் என்பதைப் பற்றி அவர் சிந்திக்க வேண்டும். மனிதன் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்பவனாகவும் அவன் மீது முழுமையான நம்பிக்கை வைப்பவனாகவும் இருந்தால் அவன் ஒருபோதும் வீணாகமாட்டான். மாறாக, அந்த ஒருவருக்காக இலட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும்.

எனவே, இன்று நாம் நமது செயல்களை கண்காணித்தவாறும் அல்லாஹ்வின் முன்பாக குனிந்தவாறும் உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களை விண்ணிலும் மண்ணிலும் ஏற்படுகின்ற ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். அத்துடன் உலகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வந்து இந்த உலகிலுள்ள மக்கள் இந்த உலகத்தில் அழிந்து போவதிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். மறுமையில் நெருப்பிலிருந்து அவர்கள் தப்பிப்பதற்கான வழியையும் அவர்களுக்கு நாம் காட்ட வேண்டும்.

எனவே, நாம் ஒரு பள்ளிவாசலை கட்டி விட்டோம் என்ற எண்ணத்தில் மகிழ்ச்சியுடன் இருந்து விடாதீர்கள். முன்னேற்றத்தின் பக்கம் செல்கின்ற நம்பிக்கையாளர் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் அவருக்கு மேலும் அவரது பொறுப்புகள் தொடர்பான உணர்வை ஏற்படுத்துகின்றது. அது அவருக்கு மேலும் பல வழிகளைக் காட்டுகிறது. தக்வாவில் முன்னேறுவது தொடர்பாக அது அவருக்கு கவனமூட்டுகின்றது. தக்வாவில் அவர் முன்னேறிச் செல்ல செல்ல அவரது பொறுப்புகள் தொடர்பான உணர்வும் அவரிடத்தில் அதிகரிக்கும். நன்மைகளை செய்வதற்கான புதிய வழிகள் அவருக்கு தென்படும்.

எனவே, இந்த முதல் அடியை நீங்கள் எடுத்து விட்டீர்கள். அதாவது ஒரு பள்ளிவாசலை நீங்கள் கட்டி விட்டீர்கள். ஆனால், நமது இந்த செயல் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்ற உணர்வு நம்மிடம் ஏற்படும்போதுதான் இதற்கான அசல் நற்கூலி நமக்கு கிடைக்கும். மேலும் இந்த பள்ளிவாசலுக்குள்ள உரிமையை நாம் நிறைவேற்ற வேண்டும். இந்த உணர்வு நம்மிடம் ஏற்படும்போது நமது தக்வாவின் தரமும் உயர்ந்து விடும். நமது இணைவணக்கங்களும் அல்லாஹ்வுக்காக இருக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலை கட்டுபவர்களுக்கு அதே போன்ற வீடு சுவர்க்கத்தில் கிடைக்கும் என்ற நற்செய்தியை கூறியிருப்பதுடன் அந்த பள்ளிவாசல் அல்லாஹ்வுக்காக கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்துள்ளார்கள். அப்போதுதான் அதற்கான நற்கூலியும் உங்களுக்கு கிடைக்கும் என்று கூறியுள்ளார்கள்.

எந்த பள்ளிவாசல் அல்லாஹ்வுக்காக கட்டப்பட்டிருக்குமோ அதில் மனிதன் களங்கமற்ற தூய உள்ளத்துடன் அல்லாஹ்வை வணங்குவதற்கு முயற்சி செய்வான். பள்ளிவாசல்களை கட்டிவிட்டு அல்லது அதற்காக எவ்விதத்திலாவது தியாகம் செய்துவிட்டு ஒருவருக்கு அதனால் ஒருபோதும் பெருமை ஏற்படாது. மாறாக, அவரது உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் மேலும் அதிகரிக்கின்றது. அல்லாஹ் அவரது இந்த தியாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் அவனிடம் துஆ செய்கின்றார்.

தக்வாவில் முன்னேறியவாறு இறைவனுக்கு விருப்பமானதும் இறைவனது அடியார்களுக்கு எளிதையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தக்கூடிய விஷயங்களையே அவர் பேசுவார். அவர்களை துன்பத்தில் ஆழ்த்தக்கூடிய எந்த விஷயத்தையும் பேசமாட்டார்.

எனவே, இன்று இறைவனது இந்த அருளுக்கு நன்றி தெரிவிப்பதற்கான சிறந்த வழி தக்வாவில் முன்னேறுவதாகும். மேலும் நமது இறைவணக்கமும் நமது எல்லா செயல்களும் இறைவனின் திருப்தியைப பெறுவதற்காக இருக்க வேண்டும். இந்த விஷயம்தான் இறைவனுக்கு விருப்பமானதாகும்.

நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் இது தொடர்பாக நமக்கு வழிகாட்டியுள்ளான். மனிதன் எல்லாவற்றையும்விட தக்வாவிற்குதான் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இறைவன் இந்த வசனத்தில் ஆடையின் உதாரணத்தை எடுத்துக் கூறியுள்ளான். ஆடைக்கு இரண்டு சிறப்புத் தன்மைகள் இருக்கின்றன. முதலாவதாக, ஆடை நமது பலவீனங்களை மறைக்கின்றது. இரண்டாவதாக, ஆடை நமது அழகுக்கு காரணமாக இருக்கின்றது. பலவீனங்களை மறைப்பதில் உடலிலுள்ள குறைகள், பலவீனங்கள் ஆகியவற்றை மறைப்பதும் அடங்கும். கடுமையான சீதோஷ்ன நிலைமை காரணமாக மனிதனிடம் ஏற்படும் தாக்கத்திலிருந்தும் ஆடை அவனை பாதுகாக்கின்றது. அழகான நல்ல ஆடை மனிதனின் தனித்தன்மையை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், பொதுவாக ஐரோப்பா முழுவதும் குறிப்பாக இந்த நாட்டிலும் ஆடைகளின் Fashion ஐ இன்றைய நாட்களில் இங்குள்ள மக்கள் எந்த அளவு வீணானதாக ஆக்கி விட்டார்கள் என்றால், குறிப்பாக பெண்கள் அணிகின்ற ஆடையை நாம் பார்க்கும்போது இவர்கள் அணியும் இந்த ஆடைகள் மூலமாக இவர்கள் தங்கள் நிர்வாணத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். கோடை காலத்தில் இவர்கள் அணியும் ஆடை முற்றிலும் நிர்வாணத்தைக் காட்டக்கூடியதாக இருக்கின்றது. எனவேதான், அல்லாஹ் இந்த (7:27) வசனத்தில் ஆடைகள் அணிவதற்கான இந்த இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும்படி கூறுகின்றான். மேலும், தக்வாவின் ஆடையே சிறந்தது என்று கூறி வெளிப்படையான ஆடையானது இந்த இரண்டு நோக்கங்களுக்காகவே உள்ளன. ஆனால், தக்வாவை விட்டும் தூரமாக விலகிச் சென்று விட்டதன் காரணமாக இந்த நோக்கத்தையும் கூட உங்களால் நிறைவேற்ற முடியவில்லை. எனவே, உலகிலுள்ள ஆடைகள் இறைவனுக்கு பிரியமான ஆடையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் பக்கம் அல்லாஹ் நமக்கு கவனமூட்டுகின்றான். மேலும் இறைவனது பார்வையில் சிறந்த ஆடை தக்வாவின் ஆடையாகும்.

இந்த வசனத்தில் **ரீஸ்** என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் **பறவைகளின் சிறகு** என்பதாகும். அந்த பறவைகள் தமது சிறகால் தம்மை போர்த்தியவாறு அழகாக காட்சியளிக்கின்றன. எந்த பறவை தனது சிறகுகள் மூலம் அழகாக காட்சியளிக்கின்றதோ அந்த சிறகுகள் ஒடிக்கப்பட்டுவிட்டால் அல்லது ஏதாவது நோயின் காரணமாக அந்த சிறகுகள் இல்லாமல் ஆகி விட்டால் அந்த பறவையின் தோற்றம் மிகவும் வெறுக்கத்தக்கதாக ஆகி விடுகின்றது. பிறகு இந்த சொல்லுக்கு **அழகிய ஆடை** என்ற பொருளும் இருக்கின்றது. ஆனால், இன்றைய நாட்களில் அழகான ஆடை என்பதற்குரிய இலக்கணம் நிர்வாணத்தைக் காட்டும் ஆடை என்றாகி விட்ட துர்பாக்கிய நிலையை நாம் பார்க்கின்றோம். இதில் அதிகம் ஆண்கள்மீதுதான் குற்றம் இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் பெண்களுக்கு இவ்விஷயத்தில் முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளார்கள். பெண்களும் தங்கள் புனிதத் தன்மையையும் வெட்கத்தையும் மறந்து விட்டார்கள். ஒன்றிரண்டு அஹ்மதி முஸ்லிம் பெண்களும் இந்த தீய தாக்கத்திற்கு இரையாகியுள்ளார்கள். பர்தாவிலிருந்து அவர்கள் வெறியேறியதும் அதற்கு அடுத்த கட்டமாக நிர்வாண ஆடையில் அவர்கள் வெளியில் வர ஆரம்பித்து விடுகின்றார்கள். எனவே, ஒவ்வொரு பெண்ணும் தனது புனிதத்தன்மையை பாதுகாக்க வேண்டும். நேற்று என்னிடம் ஒரு புதிய அஹ்மதி சகோதரர் நாம் வாழும் இந்த சமுதாயத்தில் பல தீமைகள் உள்ளன. நிர்வாண ஆடை இருக்கின்றது. நாம் எப்படி நமது மகள்களை இந்த சமுதாயத்தன் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக

வைக்க முடியும்? என்று கேட்டார். அவருக்கு நான் கூறிய பதில் சிறு வயதிலிருந்தே குழந்தைகளிடம் தங்களது புனிதத் தன்மை பற்றிய உணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் யார்? இறைவன் அவர்களிடம் எதை விரும்புகின்றான்? என்பதைப் பற்றி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். பிறகு 5 அல்லது 6 வயதிலிருந்து அவர்களுக்கு, அவர்கள் அணிகின்ற ஆடை தொடர்பாக கவனமூட்ட வேண்டும். உங்களது அக்கம்பக்கத்தில் உள்ள சமுதாயத்தினர் எப்படிப்பட்ட ஆடையை வேண்டுமானாலும் அணியட்டும். ஆனால், நீங்கள் அணியும் ஆடை அவர்களிலிருந்தும் மாறுபட்டதாக ஏன் இருக்க வேண்டுமென்றால், நீங்கள் அஹ்மதிகளாக இருக்கின்றீர்கள். மேலும் நிர்வாணத்தை மறைக்கின்ற அந்த ஆடைதான் அல்லாஹ்வுக்கு விருப்பமானது என்று கூறி அவர்களுக்கு சிறு வயதிலேயே புரிய வைத்து அவர்களுக்குள் இருக்கும் அந்த நல்ல இயல்பை வெளியில் கொண்டு வாருங்கள். அவர்கள் ஒவ்வொரு பணியையும் இறைவனுக்காகவே செய்ய வேண்டும் என்று புரிய வைக்க வேண்டும். பிறகு மெல்ல மெல்ல அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும் வரை அவர்களது மூளையில் இந்த விஷயம் வலுவாகவும் உறுதியாகவும் பதிந்து விடும்.

இவ்வாறே **ரீஸ்** என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளும் இருக்கின்றது. வாழ்க்கைக்கு தேவையான வசதிக்கும் இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. இவற்றிற்கும் தக்வா அவசியமானது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். வாழ்க்கைக்கு தேவையான வசதிகளை பெறுவதறகு எந்த தவறான செயலையும் நாம் செய்யக் கூடாது. அல்லாஹ் அனுமதிக்காத வியாபாரங்களை செய்யக் கூடாது. அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிப்பணத்தை திருடக்கூடாது. இவ்வாறான செல்வத்தை நீங்கள் திருடும்போது வெளிப்படையாக பார்க்கும்போது ஒருவேளை தற்காலிகமாக அந்த செல்வத்தின் மூலமாக ஒரு அழகிய வீட்டை நீங்கள் கட்டினாலும் தக்வாவிலிருந்தும் வெகுதூரம் நீங்கள் விலகிச் சென்று விடுவீர்கள். எனவே, இறைவன் கூறுகின்றான்.

உங்களது பலவீனங்களை மறைப்பதற்காகவும் உங்களது அழகிற்காகவும் இறைவன் உங்களுக்கு அனுமதித்துள்ள ஆகுமான பொருள்களை நீங்கள் பயன்படுத்துவது அவசியமானதாகும். ஆனால், தக்வாவின் ஆடைதான் அசல் விஷயமாகும் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். அதன் பக்கம் உங்கள் பார்வை இருந்தால் வெளிப்படையான ஆடையை பேணுவதில் உங்களது நடை, உடை, பாவனை மற்றும் உங்களது அழகிற்காகவும் இறைவனது கட்டளைக்கேற்பவே நீங்கள் செயல்படுவீர்கள். எவ்வாறு உங்களது தந்தையான ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தன்னை மறைத்துக் கொள்ள முயற்சி செய்தாரோ, ஷய்த்தான் ஏற்படுத்திய தடுமாற்றத்திலிருந்து எப்படி அவர் தன்னை பாதுகாத்துக் கொண்டாரோ அவ்வாறே ஆதமின் சந்ததிகளும் எப்போதும் நினைவில் வைக்க வேண்டிய இறைவனைப் பற்றிய பயமும், அச்சமும் எல்லா நேரமும் கண்முன் இருந்தால், இஸ்திக்ஃபார், தவ்பா, துஆ ஆகியவற்றின் மூலம் அதை தொடர்ந்து பாதுகாத்து வர நீங்கள் முயன்றால்தான் உலகிலுள்ள எண்ணற்ற வீணான விஷயங்களிலிருந்து நீங்கள் தப்பிக்க முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் திருக்குர்ஆனில் தக்வாவை ஆடை என்ற பெயரால் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். திருக்குர்ஆனிலுள்ள லிபாஸுத் தக்வா (தக்வாவின் ஆடை) என்பதுதான் திருக்குர்ஆனிலுள்ள சொல்லாகும். இந்த சொல் சுட்டிக்காட்டுவது ஆன்மீக அழகும், ஆன்மீக பொலிவும் தக்வாவின் மூலமாகவே உருவாகின்றது. மனிதனின் இறைவனுடைய எல்லா அமானத்துகளையும் ஈமான் தொடர்பாக அவனிடம் செய்துள்ள உடன்படிக்கைகளையும், அவ்வாறே இறைவனின் படைப்பினங்களிடம் செய்துள்ள எல்லா உடன்படிக்கைகளையும், அமானத்துகளையும் முடிந்த வரை சரியாக நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அதாவது, அதன் மிக மிக நுட்பமான அம்சங்களையும் சரியாக நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

நமது ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவரும் தக்வாவின் வழிகளில் முன்னேறிச் செல்வது கட்டாயமானதாகும். அதன் மூலம் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அவர் பெற வேண்டும். அதன் மூலம் அவரது ஈமானில் வளர்ச்சி ஏற்பட வேண்டும்.

ஆக, இந்த குறைந்தபட்ச அளவுகோலானது நம்மிடம் இருக்க வேண்டும். நமது அழகு வெளிப்படையான ஆடைகளிலோ, செல்வத்தை ஒன்றுசேர்ப்பதிலோ அல்லது மிகப்பெரிய வீடுகளை

கட்டுவதாலோ அல்லது அவற்றை அலங்கரிப்பதாலோ அமையாது. மாறாக, உண்மையான அழகான ஆன்மீக அழகானது தக்வாவின் ஆடையில்தான் இருக்கின்றது. இதுவே ஒரு அஹ்மதியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த தக்வாவின் ஆடையை நாம் எப்படி பெற முடியும்? அது அல்லாஹ்விடம் நாம் செய்துள்ள உடன்படிக்கைகளுக்குரிய உரிமைகளை செலுத்தியவாறு அதை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் கிடைக்கும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இறைவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் சரியாக செலுத்துவன் மூலமே அது கிடைக்கும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு அஹ்மதி இந்த உரிமைகளை செலுத்துவதற்கு என்ன வழிமுறையை பேண வேண்டும்? இதற்காக நம் முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனைகளின் வடிவில் ஒரு செயல்திட்டத்தை வைத்துள்ளார்கள். நாம் இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க முடிந்த அளவு முயற்சி செய்வோம் என்று நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அதற்கேற்ப நாம் முயற்சிகளை செய்ய வேண்டும்.

சுருக்கமாக, **முதலாவது நிபந்தனை**யை கூறுகின்றேன். எந்த நிலையிலும் இறைவனுக்கு இணை வைக்கக் கூடாது. வெளிப்படையான **ஷி**ர்க்கும் இருக்கின்றது. மறைமுகமான **ஷ**ர்க்கும் இருக்கின்றது. அன்றாட வாழ்வில் பல வி**ஷ**யங்களில் நாம் ஈடுபடுகின்றோம். அவை நம்மை இறைவனை வணங்குவதை விட்டும் கவனமற்றவர்களாக ஆக்கி விடுகின்றன. ஆனால், நமது அசல் அழகு இறைவனை வணங்குவதில்தான் இருக்கின்றது என்பதை எப்போதும் நாம் நினைவில் வைக்க வேண்டும். அந்த மறைமுகமான **ஷி**ர்க்கிலிருந்தும் தப்பிப்பதில்தான் நமது உண்மையான நற்பலன்கள் இருக்கின்றன.

அன்றாட வாழ்வில் மனிதன் சந்திக்கின்ற பிரச்சனைகள் மூலம் ஏற்படும் எல்லா தீமைகளும் **பைஅத்தின் இரண்டாவது நிபந்தனை**யில் வந்து விட்டது. ஒரு மூஃமின் அவற்றிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும். பொய், தீய பார்வை, விபச்சாரம் ஆகிய தீமைகள் இந்த நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு விபச்சாரம் என்பது வெளிப்படையாக விபச்சாரத்தில் ஈடுபடுவது மட்டுமல்ல. தீய எண்ணங்கள் மூளையில் அடிக்கடி வருவதும், அதில் இன்பம் காண்பதும்கூட விபச்சாரத்தின் ஒரு வகைதான். பிறகு குழப்பம் விளைவித்தல் என்ற தீமை குறிப்பிடப்பட்டுள்ளது. சமுதாயத்தில் குழப்பம் பரவும் வகையில் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் இதில் அடங்கும். அநீதியிழைத்தல், நம்பிக்கைத் துரோகம், கிளர்ச்சியில் ஈடுபடுவது ஆகிய தீமைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசாங்க அமைப்புக்கு எதிராக செயல்பட்டாலும் சரி, ஜமாஅத்தின் அமைப்புக்கு எதிராக செயல்பட்டாலும் சரி அல்லது அவற்றிற்கு எதிரான வி**ஷ**யங்களைப் பேசுவதும் சரி அது கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற செயலாகி விடும். மனதின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றிச் செல்லாமல் மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதாக நாம் உடன்படிக்கை செய்துள்ளோம்.

பிறகு **மூன்றாவது நிபந்தனை**யில் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவது கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப தொழுகைகளை நிறைவேற்றுவோம் என்று நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். இப்போது பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு குறிப்பாக உங்களுக்கு இதுபற்றிய நினைவூட்டல் இருந்து கொண்டேயிருக்க வேண்டும். பிறகு தக்வாவில் முன்னேறுவதற்கு ஃபர்ளான தொழுகைகளை மட்டுமல்லாமல் தஹஜ்ஜுத் தொழுவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் ஓதுவதன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும் என்று பைஅத் நிபந்தனைகளில் இருக்கின்றது. ஏனென்றால், நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத்தான் அல்லாஹ் வஸீலாவாக – ஊடகமாக வைத்துள்ளான். நாம் அன்னார் மீது தரூது ஓதவில்லை என்றால் நமது துஆக்களும் பலனற்றதாக ஆகிவிடும். நாம் நமது தப்லீகில் வெற்றியின் இலக்குகளை கடந்து செல்வதற்குரிய வழிமுறை இதுவேயாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுதல் நமது ஆன்மீக நிலைமைகளை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்லும். பிறகு தொடராக இஸ்திக்ஃபார் செய்வது கூறப்பட்டுள்ளது. இறைவனது அருள்களை நினைத்து அவனைப் புகழ்வதும் பைஅத் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நான்காவது பைஅத் நிபந்தனை**யில் பொதுவாக எல்லா மனிதர்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் மன உணர்ச்சியின் காரணமாக எவ்வித தீங்கும் இழைக்க மாட்டேன் என்று நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். இதன்படி நாம் செயல்பட ஆரம்பித்து விட்டால் எல்லாவிதமான சொந்த

காழ்ப்புணர்ச்சிகளை விட்டும் நாம் விலகி விடுவோம். அதன் மூலம் இந்த உலகம் சுவர்க்கத்திற்கு இணையானதாக ஆகி விடும்.

**ஐந்தாவது நிபந்தனை** எல்லா நிலையிலும் இறைவனுடன் வலுவான தொடர்பு வைத்தல் அதாவது எப்படிப்பட்ட நிலைமையிலும் இறைவனுடனுள்ள தொடர்பை விட்டு விடாமல் இருப்பது கூறப்பட்டுள்ளது.

**ஆறாவது நிபந்தனை**யில் எல்லாவிதமான உலக விருப்பங்ளையும் கைவிட்டு விட்டு அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளவற்றையே செய்வது என்று கூறப்பட்டுள்ளது.

**ஏழாவது நிபந்தனை**யில் கர்வத்தையும் சுயநலத்தையும் முழுமையாக விட்டு விட வேண்டும். பணிவை மேற்கொள்ளுதல், மற்றவர்களுடன் எப்போதும் மென்மையுடனும் அழகிய நல்லொழுக்கத்துடனும் பரிமாறுவது ஆகியவற்றை கடைபிடித்து நடப்பது பற்றி கூறப்பட்டுள்ளது.

பிறகு நாம் செய்துள்ள இன்னொரு உடன்படிக்கை இஸ்லாம், இஸ்லாத்தின் கண்ணியம் ஆகியவற்றை எனது உயிர், பொருள், சந்ததிகளை விட உயர்வாக கருதுவேன் என்பதாகும்.

**ஒன்பதாவது நிபந்தனை** நமது எல்லாவிதமான தகுதிகள், ஆற்றல்கள் மூலமாக மனித இனத்திற்கு பயனளிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதாகும்.

**இறுதி நிபந்தனை** என்னவென்றால், அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் முழுமையான கீழ்படிதலுடன் உள்ள தொடர்பு இருக்கும். பிறகு அத்துடன் அவர்கள் மீது எத்தகு நேசம் கொள்ளப்படும் என்றால் மற்ற எந்த உலக உறவுகளிலும் அப்படிப்பட்ட நேசம் இருக்காது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மரணத்திற்கு பிறகு இந்த உடன்படிக்கையை நாம் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் செய்துள்ளோம். காலத்தின் கலீஃபா எடுக்கின்ற எல்லா நல்ல தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அதை நாம் நிறைவேற்ற வேண்டும்.

கிலாஃபத் இறைவனின் அருட்கொடை என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கும் போது கிலாஃபத் மூலம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு தீர்ப்பையும் திருக்குர்ஆன், சுன்னத் ஆகியவற்றின் அடிப்படையில் அது நல்ல தீர்ப்பாகவே இருக்கின்றது என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்.

சுருக்கமாக, தக்வாவில் முன்னேறுவதற்காக மிக மிக அவசியமான நமது உடன்படிக்கை பற்றி நான் கூறினேன். அந்த உடன்படிக்கையை நிறைவேற்றியவாறு நாம் இறைவனை வணங்குவதற்காக பள்ளிவாசலுக்கு செல்லும்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கக்கூடியவர்களாக ஆகிவிடுவோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மீண்டும் மீண்டும் கருணையுள்ள இறைவனின் கருணையை நீங்கள் பெற விரும்பினால் நீங்கள் தக்வாவை மேற்கொள்ளுங்கள். இறைவனுக்கு வெறுப்பூட்டக்கூடிய எல்லா விதமான விஷயங்களிலிருந்தும் விலகி அவற்றை கைவிட்டு விடுங்கள். எதுவரை இறைவனுக்கு அஞ்சும் நிலைமை உருவாகவில்லையோ அதுவரை உண்மையான தக்வாவை பெற முடியாது. இறையச்சமுள்ளவராக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். தக்வாவை மேற்கொள்ளாதவர்கள் அழிந்து போகும்போது இறையச்சமுள்ளவர்கள் அதிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றார்கள். மனிதன் தனது தந்திரம், ஏமாற்று வேலை, ஆகியவற்றின் மூலம் தப்பிக்க நினைத்தால் ஒருபோதும் அவனால் தப்ப முடியாது. நீங்கள் இறையச்சமுள்ளவராக ஆகாத வரையில் உங்கள் துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தக்வாவை மேற்கொள்ளுங்கள். தக்வா இரு வகைப்படும். ஒன்று அறிவுடன் தொடர்புடையதாகும். மற்றொன்று செயலுடன் தொடர்புடையதாகும். மார்க்க அறிவும் அதன் உண்மையான ஞானங்களும் ஒருவர் இறையச்சமுள்ளவராக ஆகாத வரை அவருக்கு திறந்து தரப்படமாட்டாது.

எனவே, உங்களது இறைவணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் தக்வாவில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவர் இறையச்சமுள்ளவராக ஆகாத வரையில் அவரது தொழுகை, நோன்பு, பிற இறைவணக்கங்கள் யாவுமே குறையுள்ளதாகத்தான் இருக்கும்.

அல்லாஹ்விடம் செய்துள்ள உடன்படிக்கைகளை நிறைவேற்றி அவனது அமானத்துகளை (நம்பி ஒப்படைத்தவற்றை) அதற்குரிய உரிமைகளை செலுத்தியவாறு நிறைவேற்றும்போதுதான் நம்மிடம் தக்வா உருவாக முடியும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த பள்ளிவாசலுடன் தொடர்புள்ள எல்லா அருள்களையும் அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. நன்மையில், மனத்தூய்மையில் உங்களை முன்னேறும்படி செய்வானாக. நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைபெறச் செய்பவர்களாக ஆவதற்கும், அல்லாஹ் உதவி செய்வானாக. பொறுப்பாளர்களுக்கும் தங்கள் பொறுப்புகளைப் புரிந்தவாறு பணிவு, தாழ்மைக்குணம், அன்பு, மனத்தூய்மை ஆகியவற்றுடன் தங்களது பொறுப்புகளை நிறைவேற்றியவாறு செயல்படவும், ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கும் அல்லாஹ் தவ்ஃபீக் வழங்குவானாக.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பிரான்ஸிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் தான் கண்ட ஒரு கஷ்ஃப் – ஆன்மீகக் காட்சி தொடர்பாக அவர்கள் முதன் முதலாக எடுத்துக் கூறினார்கள். அந்த கஷ்ஃபில் கடிகாரத்தில் 10 என்ற எண்ணை அவர்கள் கண்டார்கள். அத்துடன் அவர்களது எண்ணத்தில் இது FRIDAY THE 10th என்று வந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்கள். இன்றும் தற்செயலாக FRIDAY THE 10th ஆக இருக்கின்றது. அது அல்லாஹ்வின் விதியாகும். இந்த குறிப்பிட்ட தேதியில் பிரான்ஸின் முதல் பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சி நடக்கின்றது. FRIDAY THE 10th உடன் தொடர்புள்ள இந்த அருள்கள் பற்றி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு நற்செய்தி கூறப்பட்டுள்ளதோ அதனை அல்லாஹ் பலவிதங்களில் நிறைவேற்றுகின்றான். பலவழிகளில் அதை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். அந்த அருள்கள் இந்த பள்ளிவாசல்களுடன் தொடர்புடையதாக இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. இந்த நாட்டில் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக இந்த பள்ளிவாசல் ஒரு மைல் கல்லாக அமையட்டுமாக.

நாம் வரலாற்றை பார்க்கும்போது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக பிரான்ஸில் முஸ்லிம்கள் ஸ்பெயின் வழியாக நுழைந்தார்கள். ஆனால், இங்கு பிரான்ஸில் அவர்களுக்கு இழிவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால், அவர்கள் உலகவாதிகளாக ஆகி விட்டார்கள். இறுதியில் அவர்களுக்கு தோல்வியை தழுவும் நிலை ஏற்பட்டது.

ஆனால் முஹம்மதிய மஸீஹிற்கு எத்தகைய அன்பு, நேசம் மற்றும் துஆக்களின் ஆயுதம் வழங்கப்பட்டிருக்கின்றது என்றால் அல்லாஹ்வின் அருளால் அது எத்தகைய பயனுள்ள ஆயுதமென்றால் அது உள்ளங்களை ஈர்க்கக்கூடியதாக இருக்கின்றது. அதை எவராலும் அழிக்க முடியாது. இவ்வழியில் ஏற்படும் காயம் எப்படிப்பட்டதென்றால் அது மனிதனுக்கு வாழ்வை வழங்கும்.

எனவே, இங்குள்ள அஹ்மதிகள் இந்த விஷயத்தையும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். நீங்கள் முஹம்மதிய மஸீஹின் அடிமைகளாவீர்கள். உள்ளங்களை வெல்வதற்காக இந்த முறை நடத்தப்படும் தாக்குதலானது வெளியிலிருந்து உள்ளே நடக்கவில்லை. மாறாக, இந்த தாக்குதலை நாம் பிரான்ஸின் தலைமையகத்தில் இருந்து எல்லா நாடுகள் மீதும் செய்வதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்துள்ளான். எனவே, இந்த சந்தர்ப்பத்தை வீணாக்கி விடாதீர்கள்.

உங்களது இறைவணக்கம், உயர்வான நல்லொழுக்கம் தப்லீகின் தரம் முன்பை விட மிக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். அதன் மூலம் நல்ல இயல்புள்ள மக்கள் விரைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்றுசேரும் நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. அல்லாஹ் இதற்கான தவ்ஃபீகை உங்களுக்கு வழங்குவானாக.

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT MASJID MUBARAK, PARIS, FRANCE**
**ON 10.10.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**